**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE DHARMAPURI**

O.S No. 16 of 2023

Deposition of P.W.1

Name of the Witness: திரு.ரவி

Date : 23.10.2025

**குறுக்கு விசாரணை**

நான் 2003லிருந்து சத்யா நகரில் குடியிருந்து வருகிறேன். என்னுடைய மகன் பெயர் ராஜகோபால் (எ) சந்துரு, மகள் பெயர் தர்சினி. என் மனைவி, மகன், மகள் என்னுடன் தான் இருக்கிறார்கள். வா.சா.ஆ.12 குடும்ப அட்டை 2005 - 2009 காலத்திற்குரியது என்றால் சரிதான். எனக்கு சம்பந்தப்பட்ட ரேசன் கடை சத்யா நகரில் உள்ளது. 2009க்கு பிறகு நான் ரேசன் கார்டு வாங்கவில்லை. பிறகு 2020ல் எனக்கு குடும்ப அட்டை Smart Card ஆக கொடுத்தார்கள். நான் 2009லிருந்து 2020வரை ரேசனில் பொருள்கள் எதுவுமே வாங்கவில்லை. ஒரு குடும்ப நபருக்கு ஏற்கனவே ரேசன் கார்டு இருந்தால் பழைய ரேசன் கார்டில் அவர் பெயரை நீக்கி விட்டு அவர் பெயரில் வேறு ஒரு ரேசன் கார்டு தனியாக கொடுப்பார்கள் என்றால் சரிதான். பழைய ரேசன் கார்டில் உள்ள நபர்களுக்கு தான் அதன் அடிப்படையில் புதிய ரேசன் கார்டு Smart Card ஆக கொடுப்பார்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ.12ல் என் பெயரோ என் மனைவி பெயரோ நீக்கப்பட்டதாக குறிப்பு இல்லை என்றால் சரிதான். நான் சமயத்தில் இரண்டு ரேசன் அட்டை வைத்திருந்தேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.12ல் ரேசன் பொருள்கள் வாங்க முடியும் என்ற எண்ணத்தில் என் பெயரையும், என் மனைவி பெயரையும் சேர்த்து வைத்துள்ளார்கள் என்றால்

சரியல்ல. வா.சா.ஆ.12க்கு சம்பந்தப்பட்ட ரேசன் கடை மதிகோண்பாளையம். மதிகோண்பாளையம் மற்றும் சத்யா நகர் வேறு வேறு இடம் என்றால் சரிதான். வா.சா.ஆ.12 அடிப்படையில் நான் கூட்டு குடும்பமாக இருந்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல.